உ
சிவமயம்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம்:—தாரண௵ வைகாசி மீ உஙஉ (1944 ஜூன்மீ 5 திங்கட்கிழமை) [இல கஎ

## "நான் மீண்டும் கைதியாகலாம்"

### காந்திஜி டாக்டர் ஜயக்கரிடம் கூறுகிறார்

பம்பாய் மே 31

காந்திஜி அண்மையில் டாக்டர். எம். ஆர். ஜாக்கருக்கு எழுதிய கடிதத்தைப் பத்திரிகைகளுக்கு வெளியிட்டிருக்கிறாரென்று அவருடைய காரியதரிசியான திரு. பியரிலால் ஓர் அறிக்கையிற் கூறுகிறார். அவர் மேலுங் கூறிவதாவது:-

பத்திரிகைகளில் வெளிவந்த ஆதாரமற்ற செய்திகளையும் தந்திகளையும் உத்தேசித்து மே மாதம் 20-ந் திகதி திரு. ஜயக்கருக்கு அனுப்பிய முழு விபரத்தையும் பத்திரிகைகளுக்கு வெளியிடுமாறு காந்திஜி என்னைக் கேட்டிருக்கிறார். இந்தக் கடிதம் பிரசுரிப்பதற்காக எழுதப்பட்டதல்லவாகையால் இதில் ஆழ்ந்த அர்த்தங்களெவையும் தேடிப்பிடிக்கப்படமாட்டாதென்று காந்திஜி நம்புகிறார். குறித்த கடிதம் பின்வருமாறு:-

அன்புள்ள டாக்டர் ஜயக்கருக்கு:-

தேசம் என்னிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கிறது. இந்த விடுதலையைப்பற்றி நீங்கள் என்ன அபிப்பிராயங் கொண்டிருக்கிறீர்களோ அது எனக்குத் தெரியாது. நான் அவ்வளவு சந்தோஷத்தோடில்லை. எனக்கு வெட்கமாகக்கூட இருக்கிறது. எனக்குச் சுகவீனம் ஏற்பட்டிருக்கக்கூடாது. சுகவீனமில்லாமலிருக்க நான் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை. எனது இப்போதைய பலவீனம் மாறியதும் அவர்கள் என்னை மீண்டும் சிறையில் வைப்பார்களென்று நான் உணருகிறேன். அவர்கள் என்னைக் கைது செய்யாவிட்டால் நான் என்ன செய்யமுடியும்?

'ஆகஸ்ட் தீர்மானத்தை என்னால் வாபஸ்வாங்க முடியாது. நீங்கள் சரியாகக் கூறியதுபோன்று அஃது அபாயமற்றது. அஃது எனதுஜீவ மூச்சு. 29-ந் திகதிவரை நான் மௌனவிரதம் அனுஷ்டிக்கிறேன். நான் உங்களிடம் பியரிலாலை அனுப்பிவைக்கவா? அதுவும் உங்களுடைய ஆரோக்கியத்தைப் பொறுத்ததான். உங்களுக்கு அவ்வளவு ஆரோக்கியமில்லையென்பதை நான் அறிவேன்.'

உங்கள் அன்புள்ள
(ஒப்பம்) எம். கே. காந்தி

---

## பீஹார் மாகாணக் காங்கிரஸ் மகாநாடு

### யூன்மாதம் 7ந் தேதி கூட்டமாம்

பாட்னா மே 20

இப்பொழுதுள்ள நிலைமைபற்றி அபிப்பிராயங்களைப் பரிமாறிக்கொள்ள யூன் 7ந் தேதி பாட்னாவில் பீஹார் மாகாண இந்திய தேசீயக் காங்கிரஸ் பிரதிநிதிகளின் கூட்டமொன்று நடக்குமென்று பழைய பிரதமமந்திரி திரு சின்ஹா இதர பிரபல காங்கிரஸ்வாதிகள் இருவரின் கையொப்பத்துடன் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

## இந்தியாவின் ஜனப்பெருக்கப் பிரச்னை

### வறுமையை ஒழிக்க வேண்டியதன் அவசியம்

இந்தியாவின் ஜனப்பெருக்கப் பிரச்னை பற்றி விவாதிக்கையில 'நியூஸ்குரோணிக்கள்' இன்று கூறுவதாவது:—விஷயங்கள் மிகவும் பயங்கரமானதாக இருக்கின்றன. நாம் பிறக்கும்போது ஏறக்குறைய 62 வருடங்களுக்கு இருப்போமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் 26 வருடங்கள்தான் வாழ்ந்திருக்க முடிகிறது. இந்தியாவிலுள்ள ஜனங்களில் மூன்றிலொருபங்குபேர் தீராத வியாதியஸ்தர்களாக இருக்கின்றனர். இந்தியர்களில் அனேகர் அரைப்பட்டினியாகவே வாழ்கின்றனர். இப்படியெல்லாம் இருந்தும் ஜனத்தொகை துரிதமாக அதிகரிக்கிறது. இந்தியாவிலுள்ள நிலைமைகள் ஜனங்களின் தொகையைக்கட்டுப்படுத்துவதிலன்றி ஜனத்தொகை அதிகரித்து ஜனங்களை வறுமையில் ஆழ்த்தும் என்ற பழைய கோட்பாட்டைத் திருஷ்டாந்தப்படுத்துகின்றன. சென்ற அரை நூற்றாண்டில் இந்தியாவில் உற்பத்தி அதிகரித்திருக்கிறது. ஆனால் ஜனங்களின் வாழ்வு சுகப்படவில்லை. தொகைமட்டும் அதிகரிக்கிறது. இப்பிரச்னையைப் பரிகரிப்பதற்குக் குறுக்குப்பாதை இல்லை. இருந்தபோதிலும் இந்தியாவில வறுமையும் புஷ்டியின்மையும் நீடித்து நிலவ விட்டுக்கொண்டிருக்கக்கூடாது.

### நெருக்கடி தீரவேண்டும்

சென்றவருடம் ஹாட்ஸ்புரிங் மகாநாட்டில் பசிக்கும் புஷ்டியின்மைக்கும் முதற்காரணம் வறுமையென்றும் தீர்மானிக்கப்பட்டதை 'நியூஸ்குரோனிக்கிள்' ஞாபகப்படுத்தி மேலும் தொடர்ந்து கூறுவதாவது:—ஒரு உலக ஸ்தாபனத்தின் மூலம் உற்பத்திச் சக்தியை அதிகரித்து அனைவருக்கும் வேலை கொடுத்து வறுமையை ஒழிக்கவேண்டும். இந்தியாவின் பொருளாதாரப் பிரச்னைகள் அரசியலை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. இந்தியாவின் பொருளாதாரத் தேவைகள் அரசியல் நெருக்கடி முடிவடையவேண்டுமென்றும் அவசரப்படுத்துகின்றன. அரசியல் நெருக்கடி தீர்ந்தால் இந்தியாவின் சாசுவதமான வறுமை மறையப்பெறும்.

---

## தவேலராவிற்குப் பெரும் வெற்றி

### 14 அதிகப்படியான ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன

டப்ளின், யூன் 1

டிவேலராவின் கட்சியான பியானா பெயிலுக்கு மற்ற எல்லாக் கட்சிகளையும்விட 14 ஸ்தானங்கள் அதிகமாகக் கிடைத்திருக்கின்றன.

கடைசியாகவுள்ள கட்சி நிலைமை பியானாபெயில் 76 ஸ்தானங்கள், பைன்கால் 30, தொழிலாளர் 8, தேசீயத் தொழிலாளர் 4, விவசாயிகள் 4 சுயேட்சை வாதிகள் 11.

முன்பு பியானாபெயிலில் 67 ஸ்தா[illegible] 7[illegible] ஸ்[illegible]

## ஸேர். பரனுக்கு அனுதாபம்

### 'இலங்கையின் கிளாட்ஸ்டன் என்கிறார் திரு. தகநாயகா

காலி ஜூன் 1—

காலி எஸ்பிளனேட் மைதானத்தில் மேயர் குணசேகரா தலைமையில் இன்று மாலையில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. காலஞ்சென்ற ஸேர். பரனின் குணவிசேஷங்களைப் பலர் புகழ்ந்து பாராட்டினர்.

ஸேர். பரன் இலங்கையின் கிளாட்ஸ்டன் என்று திரு. டபிள்யூ. தகநாயகா கூறினர்.

மவுனத்துடன் துக்கத் தீர்மானம் நிறைவேறியது.

களனிவலி டிஸ்திறிக் இலங்கை இந்திய காங்கிரஸ் ஸேர். பரனின் மரணத்தால் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பெரும் நஷ்டமேற்பட்டுள்ளதாகத் துக்கம் தெரிவித்துள்ளது.

### கண்டி மாணவர் அனுதாபம்

கண்டி யூன் 1—

இன்று இரவு ஏழரை மணிக்கு இந்திய மாணவர் ஹாஸ்டலில் ஸர் பரன் பிரிவுக்காக ஓர் அனுதாபக் கூட்டம்நடைபெற்றது. ஸேர் பரன் பிரிவினால் இலங்கை அடைந்துள்ள மாபெரும் நஷ்டத்தைப்பற்றியும்; அன்னவரது தேசிய சமூக சமய வாழ்க்கையைப்பற்றியும் பல மாணவர்கள் பேசியபின்னர் மாணவர்கள் எல்லோரும் எழுந்துநின்று மூன்று நிமிடம், அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்த பின்னர் அனுதாபம் தெரிவித்து அரசாங்கசபை முதல்வருக்கு தந்தி அனுப்பப்பட்டது.

---

## மேற்கு ஐரோப்பாவில் இறுதிப்போர்

### ஜேர்மன் இராணுவ விமர்சகரின் கருத்து

லண்டன் ஜூன் 1—

இத்தாலியிலுள்ள ஜெர்மன் செய்தி ஸ்தாபன இராணுவ நிருபரொருவர் இன்று அறிவிப்பதாவது:—ஐரோப்பாவின் தென்பாரிசத்தைத் தாக்கும்பொருட்டுப் பிரெஞ்சு வட ஆபிரிக்காவில் இப்பொழுது 15 நேசநாட்டு டிவிஷன்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. சென்ற சில மாதங்களில் கோர்சிகாவை நேச இராணுவ பீடம் பிரான்ஸ்மீதும் இத்தாலிய சமவெளிமீதும் படையெடுக்க ஒரு நல்ல தளமாகச் செய்திருக்கும்.

வட ஆபிரிக்காவில் 10 காலாட் படை டிவிஷன்களும் இருக்கின்றன. ஐரோப்பாவின் மேற்குக் கரையோரமாகப் பெரும் நேசப் படையெடுப்பு நடவடிக்கைகள் ஏற்படும்பொழுது இத்துருப்புகளும் சேர்ந்தாற்போல் நடவடிக்கைகளில் இறங்கும்.

வட ஆபிரிக்கத் துறைமுகங்களில் துருப்புகளை இறக்கும் படகுகள் அதிகமாக இருப்பதும், இதை மேலும் சுட்டிக்காண்பிக்கின்றன. ஆனால், மேற்கு ஐரோப்பாவில் [illegible]யாரின் முடிவான யுத்தம் நடைபெறும்.

## ஸேர். பரனின் தகனக்கிரியை

### விடுமுறை ஆலோசனையை ஏற்க மறுப்பு

காலகதியடைந்த ஸேர். பரன் ஜயதிலகாவின் பிரேத தகனம் சம்பந்தமாக சென்ற வெள்ளிக்கிழமையன்று இராணி மாளிகையிலிருந்து வெளியிட்ட ஒரு அறிக்கை கூறுவதாவது:—

ஜூன் மாதம் 3-ந் திகதி சனிக்கிழமை இன்று முழுவதும் இலங்கை அரசாங்கத்தின் கொடிகள் யாவும் தாழ்ப்பறக்க விடப்படலாமென்று தேசாதிபதி அறிவிக்கிறார்.

"மரியாதைக்கு அறிகுறியாக அரசாங்கக் காரியாலயங்கள் காலை வேளையில் மூடப்பட்டிருக்கவேண்டுமென்னும் ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. காலகதியடைந்தவர் யுத்த முயற்சியில் தீவிரமாக ஈடுபடவேண்டுமென்று விரும்புபவர் இப்போதைய நெருக்கடிச் சமயத்தில் விடுமுறை விட்டால் யுத்தமுயற்சிக்கு விக்கினம் ஏற்படும். அது காலகதியடைந்த தலைவரின் நோக்கத்துக்கு முரணாகும். ஆகவே விடுமுறையின்றி எல்லாக் காரியாலயங்களும் திறக்கப்பட்டிருப்பதுதான் அவருக்கு மரியாதை செலுத்துவதற்கான ஒரு சிறந்தசெய்கையாகும்."

ஸேர். பரனின் பூதவுடல் சனிக்கிழமை காலை தெஹிவளையிலிருந்து கொண்டுவரப்பட்டு காலை 10 மணிமுதல் பின்நேரம் 3 மணிவரை அரசாங்கசபையின் வாசேவ மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தது. அதன்பின்னர் ஊர்வலமாகப் பொதுமயானத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டும் விசேஷமாக ஏற்படுத்தப்பட்ட சிதையில் தகனஞ் செய்யப்பட்டது.

---

## சாங்ஷாவை ஜப்பானியர் நெருங்கிவருகின்றனர்

### ஹோனான் தலைநகருக்கு 42 மைல் தூரத்தில் இருக்கின்றனர்

சுங்கிங் ஜூன் 1—

தென்கிழக்குச் சைனாவில் ஹூனான் மாகாணத்தின் தலைநகரான சாங்ஷாவிற்கு வடக்கே 42 மைல் தூரத்தில் ஜப்பானியர் இருக்கின்றனர்.

கான்டன்—ஹாங்கோ நதிக்குக் கிழக்கே ஜப்பானியர் மிலோ நதியைக் கடந்துவிட்டனர். சாங்ஷாவிற்கு வடக்கே கெவிபி என்னுமிடத்தில் ஜப்பானியர் சீனத் துருப்புகளுடன் போரிடுகின்றனர்.

டங்டிங் ஏரியின் தென்கரையில் துருப்புகளை இறக்க, ஜப்பானியர் செய்த முயற்சி பலிக்கவில்லை. ஹோனான் மாகாணத்தில் லோயாங்குக்கு தென்மேற்கே 42 மைல் தூரத்திலுள்ள சங்ஷின் என்னும் நகரைச் சீனர் திரும்பக் கைப்பற்றியிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரண௵
வைகாசி௴ ௨௩ திங்கட்கிழமை

## தாய்மொழியை விருத்திபண்ண வழி II

தாய்மொழியை விருத்தி பண்ணும் பொறுப்பு அம்மொழியைக் கற்பிக்கும் உபாத்தியாயர்களிலே அதிகம் தங்கியிருக்கின்றது. உபாத்தியாயர்களாயுள்ளவர்கள் தாங்களே தாய்மொழியறிவு அதிகமுடையவர்களாயும் தாய்மொழியில் அபிமான முடையவர்களாயும் அம்மொழியைத் தம்மிடத்திற் படிக்கும் பிள்ளைகட்கு ஊட்ட வேண்டுமென்ற ஆர்வமுடையவர்களாயும் இருத்தல் வேண்டும். இக்காலத்துள்ள ஆசிரியர்களுட் பலர் தமிழ்த்திற் பயிலும் பிள்ளைகட்கு வித்தியாபகுதியார் விதித்த பாடங்களை மாத்திரம் படிப்பித்து அப்பாடங்களில் அப்பிள்ளைகள் சித்தியடைந்து விட்டாற் போதுமென்று திருப்தியோடு இருக்கக் காணப்படுகின்றனர். அப்படியல்ல; வித்தியாபகுதியாருடைய நியந்தனைக்குரிய பாடங்களுடன் தாய்மொழிக்குரிய இலக்கண இலக்கியங்களையும் செவிக்குச் சுவைபயக்கும் பாக்களையும் புலவர்கள் சரித்திரங்களையும் பிள்ளைகளுக்கு ஆர்வம் தரும்படி சமயம் வாய்க்குந்தோறும் ஆசிரியர்கள் எடுத்துச் சொல்லித் தெருட்டுதல் வேண்டும். முல்லை, அருள், தெய்வலங் கொள்கை, மென்மை, கல்விப் பலம் தணிவு, கட்டுப்பாடு வணக்கம் முதலிய நல்லொழுக்கங்களோடு கூடியவர்களே இப்படியான தாய்மொழித் தொண்டினைச் செய்தற்கு அருகராவர். உபாத்தியாயர்களுட் சிலர் தெய்வக் கொள்கையில்லாதவராய், தாய்மொழி மரபறியாதவர்களாய், நாஸ்திகம் பேசுபவர்களாய், எவ்விஷயத்திலும் தெளிவான அறிவில்லாதவர்களாயிருந்துகொண்டு தம் வீட்டுக் கொள்கைகளைப் பிள்ளைகட்டும் புகட்டத் தொடங்கி, தாமும் கூடாப்பட்டு அப்பிள்ளைகளையும் கூடாப்பழக்கமுடையவர்களாக்குகின்றனர். இப்படிப்பட்ட ஆசிரியர்கள் உடனுக்குடன் மேலதிகாரிகளால் வித்தியாசாலைகளிலிருந்து அகற்றப்படவேண்டியவர்களன்றோ!

தமிழ்மொழி வருத்தி விஷயமாகச் சொல்லுமிடத்து ஆரிய திராவிட பாஷாபேதச் சண்டைகளும் மதவாதச் சண்டைகளும் தமிழை வருத்தஞ் செய்யும் பொருட்டுத் தங்களால் ஆனமட்டும் முயற்சிகளைச் செய்து வருகின்றார்கள், ஆனால் இலங்கை வித்தியாபகுதியார் இலங்கையிலுள்ள ஆசிரியர் பயிற்சிக்குரிய பாடங்களி[ல்] இக்காலத்தில் திறமை குன்றிவரலாயின. ஆனதால் பாலபண்டித, பண்டிதப் பரீட்சைகளிற் சித்தியெய்திய பயிற்றப்பட்ட ஆசிரியர்களோடு உபாத்திமைத் தராதரம் பெற்ற ஆசிரியர்களையும் தெரிந்து வித்தியாசாலைகளில் ஆசிரியர்களாக நியமித்தலினாலே பாஷைவிருத்திக்கு அநுகூலமுண்டாம். மேலும் இப்படியான பாலபண்டித பண்டித தேர்தல்களிற் சித்தியடைந்தவர்களையும் சுதேச மொழியில் திறமை வாய்ந்தவர்களையும் வித்தியாபகுதியார் அபிமானித்து அவர்களுக்குத் தக்க வேதனமும் உதவுதற்காகிய ஒழுங்குகளைச் செய்யவேண்டும்.

வங்கநாட்டில் வழங்கி வருவதாகிய வங்காளப் பாஷை இற்றைக்கு எழுபத்தைந்து எண்பது வருடங்களுக்கு முன்னர் மிகவும் ஈனநிலையில் இருந்ததாம்; பின்னர் அந்த வங்கநாட்டு அறிஞர் பல்லாற்றானும் முயன்று பல நூல்களை அம்மொழியிற் புதியனவாக எழுதி வெளியிட்டும், வேறு மொழிகளிலுள்ள சிறந்த நூல்களை வங்க மொழியில் மொழிபெயர்த்தும் அம்மொழியை விருத்தி செய்தனர்; வங்காளிகள் தம் மொழியிலன்றி ஆங்கிலம் முதலிய அந்நிய மொழியிற் பரஸ்பரம் கடிதங்களும் எழுதவொண்ணாதென்ற விதியையும் விதித்து இப்பொழுதும் அப்படியே செய்து வருகின்றனராம்; இதனால் இக்காலத்துள்ள சிறந்த மொழிகளுள் வங்காள மொழியும் ஒன்றாய் விளங்குகின்றது.

இந்த இலங்கையிலுள்ள தமிழ் சிங்களமென்னும் இரு பிரதான மொழிகளுள் சிங்களமொழியை விருத்திபண்ணும் விஷயத்திலே சிங்கள மக்கள் கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனர். இவர்கள் அரசினர் உதவிபெற்றுத் தம்மொழியில் முன்னில்லாததாகிய ஒரு அகராதியை எழுதுவித்து வருகின்றார்கள். இப்பொழுதும் கணிதம், க்ஷேத்திர கணிதம், பூமிசாஸ்திரம், நாட்டுச்சரித நூல், சுகாதார நூல், அங்காதிபாத நூல், குடியியல் நூல் முதலிய பல புதிய நூல்களை எழுதற்குப் பல சிறந்த அறிஞரை நியமித்து அங்ஙனம் எழுதுவிக்கற்கான ஏற்பாடு செய்துள்ளார்களாம். தங்கள் பாஷை சிறக்க இலக்கியமில்லாமையால் வேறு பாஷைகளிலுள்ள இலக்கியங்களை மொழிபெயர்த்தற்காகிய புலவர்களை நியமித்தற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளனராம். ஆனால் தமிழ்மொழி இப்படியான விருத்தியடைதற்குப் பல இடையூறுகள் உண்டாயிருக்கின்றன. தமிழ்மக்களுட் பலரிடத்தே குடிகொண்டுள்ளனவாகிய அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் என்னும் நான்கும் கருத்தில் புதுமைப் பித்தங்களும் நீங்கித் தமிழ்மொழியில் அபிமானம் பிறக்கவேண்டும்; தமிழ்ப் புலவர்களைச் சமுதாயிகத்து முன்னேற்றும் வரம்பை வேண்டும். அப்படி வந்தாலல்லாது தமிழ்மொழியும் [illegible]

## "பிரிட்டனுக்கு உலகத்தில் 2வது ஸ்தானமே"

### பிரிட்டிஷ் எழுத்தாளரான திரு. ரஸ்ஸலின் அபிப்பிராயம்

### உலக அரசியலுக்கு வாஷிங்டன் தலைநகரம்

நியூயோர்க் மே 31—

"பிரிட்டனும் அமெரிக்காவும் தோழர்களாக இருக்க முடியுமா?" என்று ஆங்கில தத்துவ அறிஞரான பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் கேட்கின்றார். அவர் கூறுவதாவது:—

பிரிட்டன் கடலை ஆண்டுவந்த வரையில் தரைப் பிரதேசங்களை அலட்சியமாகவே மதித்துவந்தது. அந்த உதாசீனத்தை வெளிப்படையாகவும் காட்டத் தயங்கவில்லை. ஆனால் இன்றோ அமெரிக்க கடற்படை பிரிட்டிஷ் கடற்படையை விடப் பெரிதாகிவிட்டது. உலக அரசியலுக்கு வாஷிங்டன் தலைநகரமாகிவிட்டது. உலகப் பொருளாதாரம் நியூயோர்க்கைச் சுற்றிகிற்கின்றது.

200 வருஷங்களாக ஆதிக்கம் செலுத்திவந்த பிரிட்டன் இன்று இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கவேண்டியதாயிற்று, கௌரவத்தை விட்டுக்கொடுக்காமல், இந்த இரண்டாவது ஸ்தானத்தை வகிக்க இங்கிலாந்து கற்றுக்கொள்ளவேண்டும். இங்கிலாந்திடமிருந்த கடல் ஆதிக்கமும் அதிகாரத் திமிரும் இன்று அட்லாண்டிக்கைக் கடந்து அமெரிக்காவிடம் சேர்ந்துவிட்டது.

### இருநாடுகளும் பகைத்தால்...

இங்கிலாந்து இன்று அமெரிக்காவிடத்தில் அதிக நேசமாய் இருக்கிறது. அமெரிக்காவும் அந்த நேசத்தை ஏற்று அதுவும் இங்கிலாந்தை நேசிக்கவேண்டும். இதனால் நம்மிரு நாடுகள் மட்டுமல்ல, உலகம் முழுவதுமே நன்மை பெற இடமுண்டு. அமெரிக்காவும் இங்கிலாந்தும் ஒன்று சேர்ந்து, ஒருமுகப்பட்டு நமக்குப் பொதுவான இலக்ஷியங்களை உலகத்தில், நிலைநாட்ட முயற்சிப்பதற்கு இது ஒரு அரிய சந்தர்ப்பம்.

இவ்விதமின்றி இவ்விரு நாடுகளும் ஒருவரையொருவர் சந்தேகத்துடன் விலகி நின்றால், நம் இலக்ஷியங்களுக்கும் அபிலாஷைகளுக்கும் விரோதியாய் இருக்கும் எதிரிகள் வெற்றியைப் பறித்துக்கொண்டு போவார்கள்.

மேற்படி கட்டுரையை பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் ஸாட்டர்டே ஈவினிங் போஸ்ட் என்ற அமெரிக்கப் பத்திரிகையில் எழுதியுள்ளார். திரு. ரஸ்ஸல் இப்போது அமெரிக்காவில் தான் வசித்துவருகிறார்.

## கஸ்தூரிபாயின் சுயசரிதம்

அகமதாபாத் மே 26

காலஞ்சென்ற கஸ்தூரிபாய் காந்தி மகாதேவ தேசாய் இவர்களின் சுயசரிதங்களை இங்கிலீஷ் ஹிந்தி குஜராத்தி மொழிகளில் வெளியிட நவஜீவன் காரியாலயம் ஏற்பாடு செய்துவருகிறது.

மகாதேவ தேசாயின் சுய சரிதத்தை மகாத்மா சிறையிலிருக்கும்பொழுது எழுத ஆரம்பித்தாராம். சோக மிகவுகால் அதுவரை எழுதமுடியாதபடி தடுத்துவிட்டன. கஸ்தூரிபாய் சரித்திரத்திற்கு காந்திஜியை முன்னுரை எழுத [illegible] வேண்டிக்கொள்ள [illegible]ருக்கிறது. கஸ்தூரிபாய்

## அரசியல் சீர்திருத்தமும் சிறுபான்மையோரும்

### ரோயல் கொமிஷன் நியமிக்க வேண்டுகோள்

சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த அரசாங்கசபை அங்கத்தினர்கள் குடியேற்றநாட்டு மந்திரியிடம் ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதென்று தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது, சிறுபான்மைச் சமூகங்களின் அபிப்பிராயங்களையும் தெரிவிப்பதற்கு வசதியாக அரசியற் சீர்திருத்தம் பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க ஒரு ரோயல் கொமிஷனை நியமிக்கும்படி அவர்கள் குடியேற்ற நாட்டு மந்திரியிடம் விண்ணப்பித்துக் கொள்வார்களாம்.

சென்ற செவ்வாய்க்கிழமை மாலை சிறுபான்மைச் சமூகங்களின் பிரதிநிதிகளடங்கிய மகாநாடொன்றில் தான் இம்மாதிரித் தீர்மானிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தவிர இப்போதைய அரசாங்க சபையைக் கலைப்பதும் ஒரு புதிய பொதுத்தேர்தலை நடத்துவதும் யுத்த முயற்சியைப் பாதிக்குமென்ற காரணத்தால் அம்மாதிரி நடவடிக்கைகளைத் தாங்கள் ஆதரிக்க முடியாதென்று தெரிவித்துக் குடியேற்றநாட்டு மந்திரிக்கு விண்ணப்பித்துக் கொள்வதென்றும் அம்மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

## ஜனாப் ஜின்னாவுடன் முஸ்லிம் தலைவர்களின் பேட்டி

ஸ்ரீநகர் மே 28—

ஜனாப் ஜின்னாவைச் சாமான்ய ஜனங்களும் இந்தியத் தலைவர்களும் இப்பொழுது பார்த்து வருகிறார்கள். தேசிய முஸ்லிம் தலைவரான ஜனாப். எஸ். எம். அப்துல்லா ஜனாப் ஜின்னாவை நான்காவது முறையாகப் பார்த்தார். அவருடன் மூன்றுமணி நேரம் பேசிக்கொண்டிருந்தார். ராஜீய விஷயங்கள் சம்பந்தமாகவே அவர்கள் பேசியதாகத் தெரிகிறது. முஸ்லிம் மகாநாட்டுத் தலைவரான ஜனாப் குலாம் அப்பாஸுடன் தான் பேசிய விவரத்தை ஜனாப். அப்துல்லா ஜின்னாவுக்குத் தெரிவித்தார்,

கம்யூனிஸ்ட் தலைவரான டாக்டர் அஷ்ரப் 15 வருஷங்களுக்குப் பிறகு ஜனாப் ஜின்னாவைப் பார்த்துத் தமது கருத்துக்களை அவரிடம் தெரிவித்தாராம். ஜனாப் குலாம் அப்பாஸ் தலைமையில் நடக்கவிருக்கும் முஸ்லிம்கள் மகாநாட்டில் ஜனாப் ஜின்னா கலந்துகொள்ளமாட்டார் என்று தெரிகிறது.

### புத்தளிகோரையில் பிங்கமை

காலியைச் சேர்ந்த மிஹிரிபன்ன என்னுங் கிராமத்தில் பாபர் சஹான் நடத்திவரும் இந்திய மருத்துவரான திரு. வி. எஸ். பிச்சையா மேற்படி கிராமத்திலுள்ள ஒரு பன்சலையில் சென்ற 23ந் திகதி ஒரு பிங்கமை நடத்தினார். அதில் காலி நகர மேயர் திரு. டபிள்யூ. தசநாயகாவும் கலந்துகொண்டார்.

சரித்திர சபர்மதி ஹரிசன் ஆசிரமத்திலுள்ள குமாரி வனமாலா ஹரிஹரி பரீக் என்பவரால் எழுதப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கீத வித்துவான்கள்

# 1 கோபால கிருஷ்ண பாரதி

[கொழும்பு அருள் தியாகராசா அவர்கள் 21-5-44 ல் வானொலியில் பேசியது]

அமிழ்தினுமினிய செந்தமிழ் மொழியைத் தமக்குத் தாய்ப்பாஷையாகக் கொண்ட தமிழ் மக்களால் போற்றப்பட்டு வளர்ந்து வரும் அருங்கலைகளில் சங்கீதமும் ஒன்று. நமது முன்னோர்கள் தமிழை இயல் இசை, நாடகம் என்ற முப்பகுதிகளாக வகுத்து வழங்கினர், இசையினுடைய பெருமையை ஓர்ந்தே, தமிழர் இசைத் தமிழை நடுநாயகமாக வைத்திருக்கின்றனர். பண்டைக்காலத்தில் இயற்றமிழுக்கு, இலக்கியமும் இலக்கணமும் ஏற்பட்டது போல, இசைத் தமிழுக்கும் நாடகத் தமிழிற்கும் ஏற்பட்டிருந்தன. சிலப்பதிகார உரையுள் அடியார்க்குநல்லார் "இசைநுணுக்கம்" முதலிய பல இசைநூல்களைக் குறிப்பிடுகிறார். அவைகளெல்லாம் மறைந்து போயின. பதினைஞ்சாம் நூற்றாண்டில் தமிழ்நாடு விஜயநகர மன்னர் ஆட்சிக்குள்ளாயிற்று. அம்மன்னர் பிரதிநிதிகளாக வடவேங்கடம் முதல் தென் குமரிவரையில் பல வடுகக் குறுநில மன்னர் ஆண்டனர். இவர்கள் வடுக நாட்டிலிருந்து தங்களுடன் கருநாடக இசையையும் தெலுங்கு பாஷையையும் கொண்டு வந்தனர். பின்வந்த மகாராஷ்டிர மன்னர்களும் கருநாடக இசையையும் வடமொழி வாவிய பாடல்களையுமே ஆதரித்தனர். அதனால் தமிழ் நாட்டின் இசை பரதேச உடை போர்த்துப் பரதேச உணவருந்தி மறைந்தது. இக்காலத்தில் பற்பல இசைமன்றங்களும், இசைவாணர்களும் தோன்றியும் பண்டைய தமிழ்ப் பண் உயிர்பெற்றெழவில்லை.

சிவகதைகளையும் ஹரிகதைகளையும் செய்பவர்களுக்கு உபயோகமான கீர்த்தனங்கள் முன்பு தமிழில் இல்லை. ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியாரெனும் சங்கீத சாகித்திய மணி அக்குறையை நீக்கித் தமிழில் சரித்திரங்களை இயற்றித் தமிழ் நாட்டாருடைய உளளத்தைக் கொள்ளை கொண்டார். இவருடைய தமிழ்க் கீர்த்தனங்களில் பக்தியும் ஞானமும் ததும்பிக் கொண்டிருக்கும். கோபாலகிருஷ்ண பாரதியார் ஏறக்குறைய நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்பு நாகபட்டினத்திற்கு அருகிலுள்ள நரிமணம் எனனும் ஊரிலே அந்தணர் குலத்திலே பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் ராமசுவாமிபாரதி யென்பது. இவருடைய முன்னோர்கள் சங்கீதப்பயிற்சியுடையவர்கள்.

முற்பிறப்பிற் செய்த புண்ணிய வசத்தாலும் பரம்பரைப் பெருமையாலும் பாரதியாருக்கு இளமையிலேயே சங்கீதத்தில் விருப்பமுமதிற் பயிற்சியும் ஆற்றலும் உண்டாயின. நல்லோர் இணக்கத்தாலும் சிவபக்திப் பெருக்காலும் இவருக்கு உலகவாழ்வில் வெறுப்பு உண்டாயிற்று. அதனால் இவர் பிரமசாரியாக இருந்து காலங்கழிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்து கொண்டார். பிரமசரிய நெறியினின்று ஒழுகி உச்சிக்காலத்தில் பிக்ஷாடனம் செய்து உண்டு வந்தார்.

தமிழிலும் இவர் தாயுமான சுவாமிகள் பாடல், கைவல்லிய நவநீதம் முதலிய நூல்களை நன்கு பயின்றிருந்தார். இவர் ஆனந்தத் தாண்டவபுரம் எனனும் ஊரில் வசித்து வந்த காலத்தில், கர்நாடக சங்கீதப் பயிற்சி இவருக்கு அதிகரித்து வந்தது. இவர் இந்துஸ்தானி சங்கீதத்தை ராமதாஸ் என்னும் சங்கீத வித்துவானிடம் கற்றுக்கொண்டார் பாரதியார் பிக்ஷையெடுத்து உண்பதும்; சிவதரிசனம் செய்வதும் கீர்த்தனங்களை இயற்றிப் பாடுவதுமாகிய காரியங்களைத் தவறாமற் செய்துவந்தார். இவருடைய சங்கீத அறிவு இவருடைய ஒழுக்கச் சிறப்பினால் மிக்க விளக்கமுற்றது. இவர் இளமை தொடங்கியே சிதம்பர ஸ்தலத்தில் அபிமானம் உடையவர். ஸ்ரீ நடராஜ மூர்த்திக்கு ஆண்டுதோறும் நடைபெறும் ஆறு அபிஷேகங்களுக்கும் தவறாமற் சென்று தரிசித்து வருவார். நடராஜ மூர்த்தியைத் தியானஞ் செய்து உருகுவார்.

இவர் மாயூரத்தில் சிலகாலம் வசித்தார். அவ்வூரில் காவேரிக்கு வடகரையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் இவர் இருந்து தியானம் யோகம் முதலியன செய்து வந்தார். இங்ஙனம் இருந்துவருங்கையில் திருவையாற்றில் இருந்த ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளுடைய கீர்த்தனங்களும், அவருடைய ராமபக்தியின் சிறப்பும் எங்கும் பரவியிருந்ததை அறிந்தவராதலால், அப்பெரியாரை எவ்வாற்றானும் தரிசித்து வரவேண்டுமென்று இவர் எண்ணினார். அதனால் ஒருநாள் இவர் திருவையாறு சென்று ஸ்ரீ தியாகையரை அவர் வீட்டிலேயே தரிசித்தார். கோபாலகிருஷ்ண பாரதியாரின் பெருமையை, தியாகராஜசுவாமிகள் முனபே அறிந்திருந்தார். முதுமையுடைய ஸ்ரீ தியாகய்யர் யாதொருபற்றுமின்றித் தம் மாணாக்கர்களோடு இருந்து ஸ்ரீ ராமபிரானுடைய புகழை பாடுவதிலும் பாடுவித்துக் கேட்பதிலுமே தம் காலத்தையெல்லாம் செலுத்தி வருவதை யறிந்து பாரதியார் மனமுருகினார். உண்மையான பக்தியோடு ஸ்ரீ ராமபிரானைப் பிரார்த்தித்துத் துதிக்கும் இன்னிசை இந்த நாடெல்லாம் பரவி முழங்குவது அவருடைய பக்தியின் சிறப்பினாலே தானென்பதை இவர் நன்குணர்ந்தார். தியாகராஜ சுவாமிகள் இவருடைய சாகித்தியசக்தியையும், சங்கீத ஞானத்தையும், நடராஜ பக்தியையும் உணர்ந்து மகிழ்ந்து பாராட்டி ஆசீர்வாதம் செய்தனர். பாரதியாருக்கு அது ஒரு புதிய ஊக்கத்தை உண்டாக்கிற்று. அப்பால் அவரிடம் விடை பெற்றுக்கொண்டு மாயூரம் வந்து சேர்ந்து, பலர் வேண்டுகோளின்படி ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனங்களைப் போலத் தமிழில் பல கீர்த்தனங்களை இயற்றினார்.

பாரதியார் அடிக்கடி சிதம்பரஞ் சென்று ஸ்ரீ நடராஜமூர்த்தியை தரிசனம் செய்து சில கீர்த்தனங்களை இயற்றி அம்மூர்த்திக்குச் சூட்டி வருவார். சிதம்பரத்திலேயே இவர் சில மாதங்கள் தங்கியிருப்பதுமுண்டு. சிதம்பரவாசம் பாரதியாருக்குச் சிவலோகவாசத்தை ஒத்திருந்தது. தீக்ஷிதர்களோடு பழகுவதும் சிவகணங்களோடு பழகுதல் போன்ற இன்பத்தை அளித்தது. சிதம்பரத்திலிருக்கின்ற காலத்தில் நந்தனார் பக்தி இவ்வருக்கு வந்தது. அப்பொழுது அங்கிருந்த அன்பர் சிலர் "நந்தனார் சரித்திரத்தில் இருந்து தாம் தரிசனம் செய்ய வேண்டுமென்று நந்தனார் பிரார்த்திப்பதாக இருக்கின்றதனை இயற்றித் தரவேண்டும்" என்று வேண்டினர்கள். அவர்கள் விருப்பப்படியே இவர் [illegible] யான் இருக்க வேண்டுமென் னும் பல்லவியுடைய கீர்த்தனை யொன்றை இயற்றினார். இங்ஙனமே சில அன்பர்கள் விருப்பப்படி சிதம்பரம் என்ற ஆனந்தம் இயற்றினார். சிலசமயங்களில் இவர் சிவஸ்தல யாத்திரை செய்து வருவார். அங்கங்கே விழாக் காட்சிகளைக் கண்டு ஆனந்தமுற்று அந்தக் காட்சிகளைக் கண்டவாறே கீர்த்தனங்களாகவும் சிந்துகளாகவும் வேறு நடைகளாகவும் இயற்றிவருவார்.

இங்ஙனம் பாரதியாருடைய பாட்டுகள் பெருகப் பெருகத் தமிழ்நாட்டில் தமிழ்க்கீர்த்தனங்களுக்கு இருந்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# சைவ சமயத்தின் இக்கால நிலை

(திருமயிலை திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்)

"வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித் தாழ்வெனுந் தன்மையோடு சைவமாஞ் சமயஞ்சாரும் ஊழ்பெறலரிது"

என்ற சிவஞான சித்தியார் திருவாக்கின்படி பரம் மேலான சைவ மரபிலே பிறந்தும் சைவம் இப்படிப்பட்டது. அச்சமயக்கடவுள் இப்படிப்பட்டவர் அவரை வழிபடும் முறைமை இத்தகையது என்று ஆராய்ந்தறிந்து அச்சமயவழி ஒழுகாது நாம் மனம்போனபடி நடப்பதால் இப்பிறப்பினாலடையக்கூடிய பயனை இழக்கின்றோம். "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ" என்று கவலைப்படுகின்றார் ஓர் பெரியார். ஆதலால், யாமெடுத்த தேகம் விழுமுன் முதல்தரும் தெய்வசபையைக் காண்பதற்கு வேண்டிய முயற்சியைத் தேடக் கடவோமாக! மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் திருநீற்றின் ஒளியைப் பண்டைக்காலத்தில் பரப்பியதற்கு அவர்கள் எடுத்த முயற்சி எத்தன்மைத் தென்பதைச் சிந்திக்கவேண்டியது அவசியம். அவர்கள் விளங்கிய காலத்தில் நமக்கு இப்போதுள்ள வசதிகள் இல்லை. சைவசம்பந்தமான தமிழ் நூல்கள் இல்லை. அவர்கள் சமயபக்தியே அவர்களுக்குத் துணை நின்றது.

பக்தி விளைக்கக் கூடிய தமிழ் நூல்கள் இப்போது அதிகமாக இருந்தும் நாம் அவற்றைக் கற்பதுமில்லை. அவற்றின் வழி நடப்பதுமில்லை. நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன்னிருந்த சைவக் கிளர்ச்சி இப்போது காண்பதரிது. சிவபுராண படனம் சனங்களுக்கு அறிவைப் புகட்டிவந்தாலும் சிவபக்தியை விளைப்பது. இப்போது புராணப் பிரசங்கம் எங்கும் செவியையுற்றதில்லை. புராணபாடினமுறையே புராணங்களுக்குப் பொருள் சொல்லுதற்கு ஒருவரும் இல்லை. இவ்விடம் எனக்குத் தெரிந்த ஓர் நிகழ்ச்சியைக் கூற ஆசைப்படுகிறேன். சில வருடங்களுக்கு முன்னர் திருமயிலாப்பூரிலே சைவப்பிரசங்கம் முறையாக வாரந்தோறும் ஓர் இடத்தில் முறைமை அவர் செவ்வனே நடத்தியது. அதற்குத் துணைபுரிய வேண்டிய சில சைவ சபையினர் அப் பிரசங்கத்தைத் திருத்த வேண்டிய முயற்சி எவ்வளவேனும் அவ்வளவையுந் தேடித் தங்கள் எண்ணங் கைகூடாமையால் வெட்கப்பட்டுச் சென்றனர். இவ்வளவிலுள்ளது நமது சைவசமயிகளின் ஒற்றுமை! நமது சமயம் எப்படி ஓங்குவது!

சைவத்தைப்பற்றி அறியவேண்டுமாயின் தமிழ்க்கல்வி அவசியம் வேண்டும். அப்போதுதான் தேவார திருவாசகங்கள், பெரியபுராணம், கந்தபுராணம் முதலிய நூல்களின் அருமையை அறியலாம். இக்காலத்துத் தமிழ்க் கல்வி முறையைக் கைக்கொண்டால் அது சங்கீத ஞானத்திலும் நாஸ்திகத்திலும் தான் கொண்டுவிடும். இப்போதுள்ள தமிழ்ப் பண்டிதர்களெல்லாம் சமயாபிமான மில்லாமைக்கு இதுவே காரணம். பழைய முறைப்படி முன்னுள்ள தமிழ்ப்பண்டிதர்களெல்லாம் அருணகிரியந்தாதி, பழமலையந்தாதி, மறைசையந்தாதி, சோணசைலமாலை, வெங்கைக் கலம்பகம், வெங்கையுலா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், பிரபுலிங்க லீலை, திருவிளையாடற்புராணம், வில்லிபாரதம் முதலிய நூல்களை வரன்முறையாகப் பாடங்கேட்டு அந்நூல்களில் வரும் புராண சரித்திரம் முதலியவற்றை நன்கு அறிந்திருந்தபடியால் அவர்களுக்குச் சிவபக்தி தானேஏற்பட்டது. இப்போதுள்ள படிப்பு முறை வேறாதலால் அது தெய்வ பக்தியை நீக்கியது.

நாவலர் அவர்கள் தமிழ்ப்புலமை என்னும் மகுடமிட்டுக் காட்டிய விதானத்தின்படி தமிழ்க்கல்வி கற்கப்படுமாயின் சமய வளர்ச்சி உண்டாகுமென்பதில் ஐயமில்லை. அம்முறைப்படி சைவ சாத்திரங்கள் கடைசியாகக் கற்கத் தக்கவை. ஆனால் இக்காலத்தவர் அவற்றை ஞானநூல்களாகக் கருதாது மற்ற நூல்களோடு ஒக்க எண்ணி அவை இலகுவாகச் சிறிதுபடித்ததும் விளங்கவில்லையென்று கூறி மலைகின்றனர். சிவஞானபோதம் முதலியன அனுபூதி மான்களுக்குரியன என்பதை இவர்கள் சிந்திப்பதில்லை. இலக்கியம் படித்துத்தான் இலக்கணம் கற்கவேண்டும். சாத்திரம் இலக்கணமும் ஏனைய நூல்கள் இலக்கியமுமாம்.

இக்காலத்தில் பல சைவசபைகள் தங்கள் தங்கள் ஆண்டு விழாக்களை அவ்வப்போது கொண்டாடுவது எல்லோரும் அறிந்த விஷயமே. அவ்விழாக்கள் முடிந்தபிறகு மறு வருடம் வரையில் அச்சபைகள் வேறு உபயோகமான காரியங்கள் செய்ததாகத் தெரியவில்லை. ஆடம்பரத்தைக் கருதி அவ்விழாக்களுக்குத் தலைவராகப் பெரும்பாலும் பெரிய உத்தியோகத்தர்களை அழைப்பது வழக்கம். அத்தலைவர்கள் சைவ உணர்ச்சியிலும் தமிழ் அறிவிலும் சிறந்தவரல்லராகலால் சமயோசிதமாக அவர்கள் தவறான கொள்கைகளைப் புகுத்துவதுண்டு. இதனால் சனங்களுக்கு விபரீதமான கொள்கைகளும் அவநம்பிக்கையும் உண்டாவது இயல்பு. இப்படித் தலைமைவகிப்பவருள் சிலர் எல்லாச் சமயங்களும் ஒன்றுதான் என்பர். எல்லாச் சமயங்களும் எப்படி ஒன்றாகும்? அதற்கு வேறு வேறு பெயர்கள் ஏன்?

பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், காஞ்சிப் புராணம், சேதுபுராணம், திருக்குற்றாலபுராணம், திருவானைக்காப் புராணம், பேரூர்ப்புராணம், தணிகைப் புராணம் முதலிய நூல்களிலுள்ள சித்தாந்தக் கருத்துக்களையும் பக்திரசத்தையும் முன்னர்ப்படித்தறிய வேண்டும். அவற்றையெல்லாம் அறிந்தபிறகே சாத்திரத்திற்குச் செல்லவேண்டும். இதுவே வரன்முறை. இவ் வரன் முறைப்படி இப்போதுள்ளவர்கள் நடவாதபடியால் பல சந்தேகங்களும் விபரீதக்கொள்கைகளும் வாதப் பட்சத்தைத் தருகின்றன. இவற்றையெல்லாம் நீக்கி யாம் சைவத்தைப் பரப்புதற்குரிய வழி தேடுவோமாக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

என்னும் வாக்கியத்தை ஒவ்வொரு சைவனும் சிந்திக்க வேண்டியது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஐந்தெழுத்தும் அடியாரும்"

(முற்றொடர்ச்சி)

[ஆசிரியர் திரு சி. செல்லத்துரை அவர்கள், தெல்லிப்பழை]

சந்தான குரவரில் ஒருவராகிய உமாபதி சிவம் தமிழ்ப் பெருநூல்கள் இவையெனக் கூறுமிடத்து "அன்பர் மொழி வாசகம்" எனவும், ஒளவைப் பிராட்டியார் மூன்றொன்று ஒப்புடைய நூல்கள் இவையெனக் கூறுமிடத்து "முனி மொழியுங் கோவை திருவாசகமும்" எனவும் விதந்து கூறப்பட்டன. 'திருவாசகம்' 'திருக்கோவையார்' என்ற இரு பெரும் நூல்களுமாகும். இவற்றைக் கைம்மாறு கருதாமல் உலகுக்கு உதவிய பெரியார் சமய குரவருள் ஒருவரும "ஒருவாத பிறவியிற் சென்று ஒருகாமம் உருத்......திருவாதவூரெனுந் திருநாமம் பெற்றவருமாகிய மணிவாசகப் பெருமான் ஆவர். இவர் பாண்டிய மன்னனிடம் மந்திரித் தலைமைபூண்டு விளங்கினர். அவ்வாறு அமர்ந்திருந்தும், உலக வாழ்க்கையிற் பயனில்லை என்று அறிந்து குருவருள் பெற நினைந்தனர். அவர் பெறநினைந்த குரு சாதாரண வியல்பினரன்று.

"பரம அஞ்செழுத்தும் ஒன்றும் பராபரம உணர்த்தும் குருபரன்" வாய்க்கவேண்டுமெனபது அவரது உட்கோள். ஐந்தெழுத்தையும், ஐந்தெழுத்து ஒன்றும் தன்மையையும், அதுவே பராபரன் எனபதையும் நன்கு உணர்ந்தவராயும், அவற்றை அதிதீவிர பக்குவரானமாக்கட்கு உணர்த்த வல்லவராயும் அமைந்தவரே ஞானகுரு எனபடுவர். ஐந்தெழுத்து ஒன்றாய் அடங்குதல் சுகாரத்திலென்க. திருமந்திர ஆசிரியரை விளையாட்டாகக் கூறி அதில் அடங்கிய அபார சக்தியை புலப்படுத்தியிருத்தலை அறியலாம்.

"நாயோட்டு மந்திரம் நான்மறை
வேதம்
நாயோட்டு மந்திரம் நாதனிருப்
பிடம்
நாயோட்டு மந்திரம் நாதாந்த
சோதி
நாயோட்டு மந்திரம் நாமறி
யோமே"

(நாயோட்டுமந்திரம், சி)

என்பது அச்செய்யுள் இவ்வோரெழுத்தே 'மகாமந்' என்னும் பெயரையும், 'பரசிவன்' என்னும் பொருளையும் உடையதாகும். அதனாற்றான் பரசிவனை "பரம அஞ்செழுத்தும் ஒன்றும பராபர"மென்று கூறப்பட்டதென்க.

இவற்றையெல்லாம் உணர்த்தும் குருவை நினைந்திருந்த மணிவாசகர் பாண்டியனுக்காக குதிரைகொள்ளும் பொருட்டுப் பெருந்துறைக்கேகினர். அவரை ஆட்கொள்ளுமாறு பரமசிவன் ஞானகுரு வடிவாகக் குருந்தின் நீழல் வீற்றிருந்தருளினார். அவரை ஆங்குக் கண்ட அடிகள் வணங்கி,

"மண்ணிலும் நிலைமை இல்லா
விழுப்பொருள் யாவும் வேண்டேன்
உனனடி அடைந்த நாயேன்
உறுபயம ஒழிதல் வேண்டும்"

என்று இரந்து வேண்டினர். பரமாசாரியார் அருள் நோக்கஞ் செய்து,

"எவர்க்கு மெய்ஞ்ஞானமா மஞ்
செழுத்தையும உணர்த்தவண்டி
அவதரித்தான ஆகலின் ஆளுடை
சிவத்தினை முன்னுக மாற்றி
தவப்பெரு வடிவங் கொண்டார்
தண்டமிழ் பாண்டியன்பர்
செவிப்புலன வழியஞ்செழுத்துந்
திருவாய் மலர்ந்தார்"

சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்னும் மூவகை ஆன்மாக்களுக்கும் மெய்ஞ்ஞானத்தைக் கொடுப்பது பஞ்சாக்ஷரமாகும். அப்பெற்றியமைந்த ஐந்தெழுத்தையும் உபதேசிக்குமிடத்து மோட்ச ஆசையுடையோர்க்குச் சிகாராதி பஞ்சாக்கரமே தக்கதாகும். மோட்ச விருப்புள்ளவர் மணிவாசகர் ஆதலின் பரமாசாரியர் ஜனன மரணங்களை நீக்கி ஆளவல்ல "சிவ"த்தை முதலிலுடையதும், வாசியை இறுதியிலுடையதும ஆகிய 'சிவாயவசி' என்னும் முத்தி பஞ்சாக்கரத்தை அவர் செவியில் உபதேசித்தனர். உபதேசித்துத் திருவடி தீக்ஷையும் செய்தனர். (மேற்கூறிய பஞ்சாக்கரத்தை 'திருநீல' மாணிக்கம்' என்றும் சொல்லுவர்) அப்பொழுது மணிவாசகர் ஞானமுதிர்ச்சி மெய்யப்பெற்றார். அவனர்ச் சரியையாதி நாற்பாதங்களும, அங்ஙனம் அடையும பேறுகளும் ஆசாரியரால் வாசகர்கட்கு உணர்த்தப் பெற்றன. யோக பாதத்தினர் சாரூபத்தை அடைவதற்கு திருவைந்தெழுத்தையும ஓம்பொழுது தாம் நோக்கவேண்டுமென்று கூறுவது ஈண்டு நோக்கத்தக்கது.

அஃதாவது இராசதம் முதலிய முக்குணங்களையும், சத்த முதலிய ஐம்புலன்களையுமடக்கி இடைபிங்கலை எனும இருநாடிகளையும அடைந்து சுழுமுனை நாடியைத் திறந்து தியானத்தானமாகிய புருவ மத்தியிற் போய் ஸ்ரீ பஞ்சாக்கரத்தை வகாரமாக இருக்குந் தன்மையை ஞானக்கண்ணாற் கண்டு திருவருளாகும் பரவெளியில் லயித்திருக்கும யோகிகள் அருளுறியின யாறுகம சாரூபத்தை அடைவர் எனபதாகும். அங்ஙனமடைதற்கு,

'தக்க அஞ்செழுத்தும் ஒன்றாந்
தன்மை கண்டு அருபெரும்
வெளிக்கே
புக்கழுந்துதல் இன்றியமையாது வேண்டற்பாலது.

குதிரை கொளக் கொண்டுவந்த திரவியத்தைத் திருப்பணிக்களித்துத் திருப்பெருந்துறையினின்ற வாதவூரர் செய்கைகளை பாண்டிமன்னன் அறிந்தனன். மீண்டு வருமாறு அவர்க்கு ஓலைவிடுத்தான். இறைவனால் விடைபெற்று ஒருவாறு மீண்டனர், இறைவனைப் பிரிந்தொரு துணையிலலா அடிகளுக்குத் தொண்டர்களுமொரு துணையாளராவரோ? ஐந்தெழுத்துச் சிவசொரூபமாகலின அவ்வருமை பூண்டிருந்த அருட்செல்வர்க்கு அதனினுமமிக்க வழித்துணை யாது? அடிகள்,

வழிக்குறு துணையாயுள்ள வள்
ளல ஐந்தெழுத்துமோதிப்
பழிச்சுறு துதலோடு மதுரைப்
பதியிற புக்கார்"

ஐந்தெழுத்தின சக்தி எத்துணைத்து?

பரமாசாரியர் வாதவூரரை நோக்கித் தொண்டரும் நீயும ஈண்டிருந்து பின்னர் கம்பால் எய்துக எனக்கூறிப் பெருந்துறையினின்றும் மறைந்தருளியபொழுது அவர் குறிப்பின்படி குருந்தின் நீழலில் தெய்வபீடிகை அமைத்து அதில மலர்ப்பாதத்தை இருத்தி வணங்கிவந்தனர். அங்ஙனம இருக்குங்காலில வாதவூரடிகள் ஆறை வழுத்தி,

"............அன்பிலாத
பணமனமானினுந் தயவைப்
பாடினர்க்கு ............

எண்பெறு" நமச்சிவாய வாழ்க"

என்பதை முதலாகக் கொண்டு திருவாசகத்தைப் பாடத்தொடங்கினர். இறைவன் திருவடிவை நினைப்பூட்டும் ஸ்ரீ பஞ்சாக்கரத்தை சிவபுராணத் தொடக்கத்தில் அமைத்தமை கற்கும் அன்பாளர்க்கு அவனை அண்மையில் கவர்ந்து இழுக்கும் காந்தமாக வல்லவா இருக்கின்றது கிற்க,

மக்களனைவரும் தத்தமக்கு வேண்டிய பலவேறு வகைப்பட்ட பயன்களைக் கருதியன்றே தவம் விரதம் என்பவற்றைப் பத்தியுடன் மேற்கொள்ளுகின்றனர். அவர்களைப்போன்றே மணிவாசகப் பெருமானும், தவஞ் செய்துள்ளார் ஆயினும் அவர் விரும்பிய பேறுகளும் மறையோர் விரும்பிய பேறுகளுக்கும் வித்தியாசம் எத்துணைத்து எனபதைப் பாருங்கள். அது ஒருவராலும் பெறற்கரும பேறும. அப்பேற்றை அவர்பொன்ற மெய்ஞ்ஞானிகளன்றி மேவமுடியாதாற பெறமுடியும். தாம பெற்ற பேற்றை மிக மகிழ்வோடு மணிவாசகத்திற தெரிவிக்கின்றார். அது,

"நானேயோ தவஞ் செய்தேன்
சிவாய நம எனப்பெற்றேன்
தேனாய் இன்னமுதமுமாய் தித்
திக்குஞ் சிவபெருமான்
தானேவந்தென துள்ளம் புகுந்த
டியேற்கருள் செய்தான்"

என்பது தவஞ்செய்து திருவைந்தெழுத்தைத் தாம் பெற்றவுடனே தேனும், அமுதமாயும் இன்சுவை பயக்கும் சிவபெருமான் தானாகவே வந்து உள்ளத்திற் புகுந்து அருள் செய்துவிட்டான் என்று இறுமாப்புடன் கூறச்செய்தமை ஐந்தெழுத்தின் அருட்செயல் என்பது நன்கு புலனாகும்.

திருப்பெருந்துறையில் இருந்த தொண்டர்கள் அனைவரும் பரமாசாரியர் கூறியவாறு மணிவாசகருடன் வீற்றிருந்தனர். தடாகத்தில் அக்கினி தோன்றியது. உடனே,

"பெருதுங் திருவஞ்செழுத்தோதி
க்காணக் கிள் நங்கனல்மீது
விரவும் போன்புடையர்கள் எல்
லாஞ் சென்று வீழ்ந்தார்கள்',

அப்பொய்கைத் தழலானது ஐந்தெழுத்தின் அருள் வலிமையினால் தகித்திலது. பின் யாது செய்ததென்றால்,

"ஆழ்ந்த கடத்துட்கனன் மூழ்கும் அன்பர் அடங்கத் துயர்நீங்கி வாழ்ந்து வணங்கிக் கணநாத வடிவாய்த் திருமன்" வரச் செய்தது இத்தகைய சக்திகள் யாவும் இம் மகா மந்திரத்திற்கன்றி வேறு எவற்றுக்கும் இல்லை என்பதை அடியார்கள் வரலாறுகளே காட்சிப்பிரமாணமாகக் காட்டுகின்றன. இவ்வைந்தெழுத்து எவ்வெவ் பயன்களை நல்குமென்பதைத் திருமூலர் திருமந்திரத்தில்,

"சிவாய நமவெனச் சித்த
மொருக்கி
அவாய மறவே அடிமை
யதாக்கிச்
சிவாய சிவசிவ வென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க
ஆனந்த மாமே"

என்றும்,

"சிவசிவ வென்கிலர் தீவினையாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே"

என்றும்,

கூறுவனவற்றால் நன்கு அறியலாம. அகந்த சக்தியுடைய திருவைந்தெழுத்தின் அருமை பெருமைகள் அளப்பரியனவாதலின் அவற்றை விரிவஞ்சி நிறுத்துகிறேன்,

நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே

## திருச்சி ரேடியோ

### செவ்வாய் ஜூன் 6

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 டி. ஆர் மஹாலிங்கம் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எம் சுலோசனா பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி நாகரத்தினம் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 டி கே நாகரத்தினம் புல்லாங்குழல் 5-45 இசைப்பயிற்சி 6 திருப்பாம்புரம் என் சிவசுப்பிரமணிய பிள்ளை பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 நாமும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 கானல் 8 திருப்பாம்புரம் என் சுப்பிரமணிய பிள்ளை பாட்டு 8-45 எம் சுலோசனா பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 வீணை கோட்டு வாத்தியம் 10-0, இசைவேளை † 10-30 முடிவு.

### புதன் ஜூன் 7

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 கதம்பம் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 அயலூர் ஆர் கிருஷ்ணன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி ஆர் துரைவேல் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 டி கே ஜயராமையர் வயலின் 5-45 இசைப்பயிற்சி 6 அயலூர் ஆர் கிருஷ்ணன் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 அச்சுக்கூடம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 தரைகானம் † 8-15 புத்தக விமர்சனம் 8-30 டி கே ஜயராமையர் வயலின் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 அமெரிக்க வாத்ய 10 ஐரோப்பிய சங்கீதம் † 10-30 முடிவு.

### வியாழன் ஜூன் 8

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 காலக்ஷேபம் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எல் ஜயலக்ஷ்மி 9 முடிவு..

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 திருக்கோகர்ணம் சுப்பிரமணிய பிள்ளை வீணை 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 திருக்கோகர்ணம் சுப்பிரமணியபிள்ளை வீணை 6 ஜயலக்ஷ்மி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்திகள் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 சாத்தூர் ஏ ஜீ சுப்பிரமணியம் பாட்டு டி கே ஜயராமையர் வயலின் 9 தியாகமல்லமோஹம் நாடகம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 சர்வதேச சம்பந்தப் பிரசங்கம் 10 இசைவேளை † 10-30 முடிவு.

## பொதுஜனப் பாதுகாப்புப் பகுதி மீன்

1944ம் ஆண்டு மே மாதம் 26ந் திகதி என்னால் எடுத்துக் கொள்ளப்பட்ட மீனுக்குப் பணம் கோருபவர்கள் கீழ்க்காணும் விபரங்களுடன் 1944ம் ஆண்டு ஜூன்மாதம் 5ந் திகதி அல்லது அதற்குமுன்னர் கொள்ளுப்பிட்டியைச் சேர்ந்த காலிரோட், 201ம் இலக்கத்திலுள்ள மீன்பிடித் தொழில் இலாகா டைரெக்டருக்கு எழுதவேண்டும்.

நேரில் கண்டுபேச அனுமதிக்கப்பட மாட்டாது.

(1) அனுப்பியவரின் பெயரும்விலாசமும்.

(2) யாருக்கு அனுப்பப் பட்டதோ அவரின் பெயரும் விலாசமும்.

(3) பெட்டிகளின் எண்ணிக்கையும் விபரமும்.

(4) ஒவ்வொரு பெட்டியிலுமிருந்த மீனின் நிறை, கீழ்க்காணும் இனங்களின் கீழ்.

(அ) அறுக்குளா (ஆ) அஞ்சிலா (இ) 1½ றுத்தலுக்கு அதிக நிறையுள்ள இதரமீன் (ஈ) 1½ றுத்தலுக்குக் குறைந்த நிறையுள்ள சிறுமீன்.

ஓ. ஈ. குணதிலகா,
பொதுஜனப் பாதுகாப்புக் கமிஷனர்.
G 30 1 & 5.6-44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மந்திரமாவது மைந்தெழுத்தே"

சைவசித்தாந்த பண்டிதர். திரு. கா. கந்தப்பு அரசினர் பாடசாலை மடிரேட்

பிறப்புமூப்பு பெரும்பசி வான் பிணி மரணம் ஆகிய துக்கவேதுக்களைச் சுக வேது, எனக்கருதி ஏமாந்து வினைகளைப் புரிந்து இன்ப துன்பங்களை மாறி மாறி அனுபவித்துக் கொண்டு உண்மையை உணராது, அழிந்துபோவனவும் நிலையற்றனவும் ஆய உலக போகங்களிலே வாழ்நாளை வீண்காளாகக் கழிக்கின்றனம். மணிவாசகப்பெருந்தகையும்,

"வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய்" எனத் திருவாய் மலர்ந்தருளினர்.

நாம் பிறப்பு இறப்பு என்னும் எல்லையுடையனவாய், மதியை விழுங்குகின்ற காமம் என்னும் பாம்பு விரிந்து நிற்பனவாய், இடையறாது சிறும் விடையங்கள் என்னும் இரைகளைத் தின்கின்ற கரணங்களாகிய மீன் கூட்டங்கள் சுழல்வனவாய், பெருமித மென்னும் பாப்பையுடையனவாய், நோய்களென்னும் ஒழியாத புலால் மணம் வீசுவனவாய், மாறிமாறித் தோன்றும் சுகதுக்க மென்னும் அலைகள் மோதுவனவாய், அகம்பாவம் என்னும் சூழைகள் இருப்பனவாய், அவா என்னும் அளவு கடந்த ஆழத்தை உடையனவாய், களவு என்னும் பாரும் மலையும் உடையனவாய், கலகமென்னும் விடங்கள் தங்கிய புழுக்கள் நெளிவனவாய், குற்றம் என்னும் நுரைகள் தோன்றுவனவாய், நிரதிசயானந்த மென்னும் முத்திக்கரையை விட்டு விலகுகின்ற பெண்களென்னுங் கொடுஞ் சுழிகளுடையதாய் இன்னும் இனைேரன்ன இன்னல்கள் மலிந்துள்ள சத்த சமுத்திரங்களைக் கடந்து, முத்தியங்கரையைச் சேர்ந்துய்தி கூடுவதற்குத் தெப்பமாய் அமைந்து முத்தியங்கரையைக் காட்ட வல்லது "மந்திர" மெனப்படும் திருவைந்தெழுத்தேயாம்.

"மந்திரமாவது மஞ்செழுத்தே யந்த மந்திரத்தி
னைந்து பொருளையுங் காட்டியிரண் டின் வழியடைத்து
மூந்துமிரண்டின் வழியைத் திறந் துயர் முத்திதந்தான்
கந்தன் கணபதிக்கப்பன கலிக்கச் சியேகம்பனே"

பவரோக வயித்தியனுய பசுபதியால் நாம் பவப்பிணியில் நின்றும் நீங்கி விடுதலை அடைதற்குத் துணைப்பொருட்களாய்த் தரப்பட்ட, மணி மந்திரம் ஔஷதம் எனப்பட்டுவனவாய உருத்திராக்கமணி, திருவைந்தெழுத்து, திருநீறு ஆய இவைகளைப் போற்றுதல் நங்கடனும். மந்திர மெனப்படும் திருவைந்தெழுத்தைக் காதலோடு மனம் கசிந்துருகிக் கண்ணீர் மல்கிப் பிற விடயங்களில மனத்தைச் செல்ல விடாது தியானிப்பவர்களை, அவ்வழிச் செல்லவிடாது தமவயின் ஆக்கவல்ல "அடக்குந்திறல் ஐவர் வல்லாட்டை" அடக்கி ஆளவல்லது அத் திருவைந்தெழுத்தேயாம்.

இத்துணைப் பெருமை வாய்ந்த திருவைந்தெழுத்துச் சிவ மூல மந்திர மெனப்படும். இஃது பிரணவமும் ஸ்ரீ பஞ்சாட்சரமுஞ் சேர்ந்துளது. பிரணவஞ் சேர்க்கும் அஞ்செழுத்தெனவும் தூ 'அஞ்செழுத்தும்' 'தூல அஞ்செழுத்தெனவும் படும். சிவாயநம எனப்படும் அத 'திருவைந்' தெழுத்தில் இறை சத்தி உயிர் திரோதம் ஆணவமலம் என்பனவாய ஐந்து பொருட்கள் அடங்கியுள்ளன.

இறையட்சரமாய சிகாரம் சூரியன் போலவும் பரையட்சரமாய வகாரம் சூரியனின் ஒளிபோலவும், உயிரட்சரமாய யகாரம் கண்போலவும் திரை யெழுத்தாய நகாரம் விளக்குப்போலவும் மலவெழுத்தாய மகாரம் இருள்போலவும் அமைந்துள்ள தென்பதை

"பானுவாமிறை யெழுத்து அதனொளிபரை யெழுத்து
ஊனமில் கண்ணேயாகும் உயிரெனுந் தனி எழுத்துத்
தீனமில் விளக்கேயாகுஞ் செப்பிய திரையெழுத்து
நானெனு மிருளேயாகும் நவையுறு மல வெழுத்தே.

என்னுஞ் செய்யுள் தெளிவுபடுத்துகின்றது. சிகாரம் பதிபட்சரமெனவும், மகாரமனு எனவும் பெருவெழுத்தெனவும் பேசா எழுத்தெனவும், வகாரம் பரையட்சரமெனவும் பிஞ்செழுத்தெனவும் பேசும் எழுத்தெனவும் பெயர் பெறும். நகாரத்தை முதலாகவுடைய திருவைந்தெழுத்து "நமசிவாய" போககாமிகள் தியானித்தற்பாலது. சிகாரத்தை முதலாகவுடைய திருவைந்தெழுத்து "சிவாயநம" முத்திகாமிகள் தியானிக்கற்பாலது.

திருவைந் தெழுத்தை விதி தவறாது உச்சரிக்கும்போது ஆன்மாவாகிய நாமும் சிவமும் உடைமையும் உடையானுமாய் அமைந்துள்ள தன்மையை ஐந்தெழுத்தோதும் முறையில் வைத்துணர்ந்தும், ஸ்ரீ பாதத்தில நகாரமும திருவுந்தியில மகாரமும் திருத்தோளில்சிகாரமும் திருமுகத்தில வகாரமும், திருமுடியில் யகாரமும் ஆக இறைவன் திருமேனி அஞ்செழுத்தால் அமைந்த பரிசுணர்ந்தும் அம்முறையே அங்கநியாசகர நியாசங்களும் அவ்வைந்தெழுத்தால் செய்துகொண்டு இதயம உந்தி புருவநடு என்னும் மூன்றும் பூசைத்தானம் ஓமத்தானம் தியானத்தானமாய்க் கருதிக் கொண்டு இங்ஙனம் வழிபாடு செய்து அவ்வைந்தெழுத்தை விதிப்படி மாறி நெஞ்சழுந்தி உச்சரிக்கும போது நவக்கோள்களுள் ஏனையவும போலக் காண்டல செல்லாத ராகு கேதுக்கள் உபராகத்திற சந்திராதித்தர்மாட்டுக் காணப்படுமாறு போல, முப்பொருள்களில் யான இதனை அறிந்தேன் அறிகின்றிலேன எனும் அறிவிற்கு விடயமாய்த் தோன்றும் ஏனைய பசுபாசங்கள் போலப் புலனாகாதவழி பதிப்பொருள் அவ்வானமா மாட்டு அவ்வுச்சரிப்பில விளங்கித் தோன்றும். சீவன்முத்தர்கள ஐந்தெழுத்து மூலமெழுத்தில ஓங்கார நிறுவும முறையில வைத்து "சிவாய" எனத் தயானிப்பர்.

"அஞ்செழுத்தினி லொருபுடை யரும்பதி யமரும
அஞ்செழுத்தினு ளொருபுடை பாசமாய் வதியும
துஞ்சலின்றிய ஒருபுடை பசுவெனத் துலங்கும
அஞ்செழுத்தினில முழுமுதலறிந்தவர் பிறவார்."

"பாசமாகி இரண்டையும படிறெனத் தள்ளி
நேசமாகிய இரண்டையும நெஞ்சுற அழுத்தி
சாசம் நீங்கிய கண்ணென முத்திரையக காணபான
ஆசை நீங்கிய நிலையிது இதற்கில்லை யையம"

எனவரும் பிரமாணச் செய்யுட்களால் மேற்காட்டியவை தெளிவுறுத்தப்பட்டமை காண்க.

சைவ நன்மக்களாகிய நாம் தீவினைகளைச் செய்து பாவத்தையீட்டி உலக போகத்தில் மயங்கியாவும் இறைசெயலே என்னும் உண்மையை மறந்து நம் செயலென மயக்குற்றுப் பிறந்திறந்துழலாவண்ணம் காப்பாற்றவல்லது இத "திருவைந்தெழுத்தேயாம்" நாம் ஐந்து ஆல்லது ஏழு வயதில சமயதீக்கை பெற்று கொலை களவு பொய் விபசாரம் ஆதியாம் இவற்றை நீக்கி மாமிச போசனத்தை விடுத்து ஆசாரசீலராய் ஸ்ரீபஞ்சாட்சரத்தை ஒன்றிய மனத்துடன் தியானித்து வரல வேண்டும். அல்வாறு தியானிக்கும் நற்பழக்கத்தினால் நாம நம மனத்தை பிறவிடயங்களில் செலல விடாதும தீய சிந்தனைகள் சிந்திக்க வொட்டாதும தடுக்கவல்லது இத் 'திருவைந்'தெழுத்தே.

"கொல்லாரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லாரேனும இயம்புவராயிடில
எல்லாத் தீங்கையும் நீங்குவரென்பரால
நல்லார் நாமம் நமச்சிவாயவே"

எனவரும் இத்தேவாரம் எவரொருவர் இத்திருவைந் தெழுத்தைச் செபிக்கின்றனரோ அவர் எப்படிப்பட்ட தீயாயினினும் அவையாவும் நீங்கப்பெற்று நன்மையை யடைவர் எனப் பெருமுழக்கிடுகின்றது.

இத்துணை மகத்துவம் வாய்ந்த திருவைந்தெழுத்தை ஓதி வருவோமாயின் கூற்றுவன் நம்பாலணுகான். யமவேதனையும மரண வேதனையும் இன்றாம். மெய்ஞ்ஞானச்செல்வராய பட்டினத்தடிகளும்,

'ஐயுந்தொடர்ந்து விழியுஞ் செருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றியூருடையீர் கையுந் தொழுப் பண்ணி ஐந்தெழுத் தோதவுந் தரவேண்டுமே"

ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகளைச் சமணர் கலலிற்கட்டிக் கடலிலிட்ட போது சுவாமிகள் "சொற்றுணை வேதியன" என்றற் றொடக்கத்த நமச்சிவாயப் பதிகத்தைப் பாடிக் கரைசேர்ந்தனர் என்றால் இவ்வைந்தெழுத்தின் பெருமையை எவரால் எடுத்தியம்ப முடியும். நாம திரோதனசத்தியின் பந்தத்தினின்றும் நீங்கி ஆணவ வலி குன்றப்பெற்று திருவருட்சத்தியின் அருட்பார்வை கிடைக்கப்பெற்று சீவன் முத்தராயிருந்து பிராரத்துவ வினை முடிவடைந்தபோது பிறவி நீக்கமாகிய பேரின்பப்பேறு கிட்டுமெனப்படுவதை இத்திருவைந்தெழுத்துக் காட்டி நிற்பதைக் கீழ்க்காணுஞ் செய்யுட்களால் காண்க.

"நகரமாகிய சேரியை நஞ்செனவெறுத்து
மகரமாகிய மலமெலலாம் வேரொடுங் களைந்து
வகரமாகிய வனத்திலிருந் திளைப்பாறிச்
சிகரமாகிய நகரிலை யடைந்தனன் சீவன்

"நகாரத்தின் மயலை ஞானவாளினால் நறுக்கி
மகாரத்தின் மறைப்பை நாமே மணியென மதியால்வாட்டி
வகாரத்தின வழியே சென்று மாலயனடையாத் தாங்கு
சிகாரத்தைக் கண்டேன் திருப்புவனத்துள்ளாரே"

நாம் மந்திரமெனப்படும் திருவைந்தெழுத்தை முறைப்படி ஓதி இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தை அடைவோமாக.

## விவாகம்

### குமாரன் இரத்தினம்-மீனும்பிகை

டக்டர் E. V. இரத்தின மவர்களின் புதல்வர் (டக்டர்) குமாரன் இரத்தின மவர்கட்கும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தலைமையாசிரியர் திரு. A. குமாரசுவாமியவர்களின் சிரேட்ட புத்திரி திருவளர் செல்வி மீனும்பிகையம்மாளுக்கும் சென்ற சனிக்கிழமை (3-6-44) இரவு பத்துமணிக்கு மேல் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில், நல்லூரிலுள்ள "தைரியஸ்தானம்" என்னும் இல்லத்தில் வைதிக முறைப்படி, சுற்றமித்திரர் அயலோர் பன்னூற்றுக்கணக்கானேர் சமூகத்தில் விவாகம் சிறப்புற நிறைவெய்தியது. தம்பதிகள் சகல ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும்வண்ணம் நல்லைநகர்ப்பெருமான் திருவருள் முன்னிற்பதாக.

### குமாரதாசன்—மகாலட்சுமி

அராலி திரு. K. கர்தையா அவர்களின் புதல்வராகிய திரு. குமாரதாசனவர்களுக்கும், மலாய்நாட்டில் உயர்தர உத்தியோகம வகித்திருந்து இப்பொழுது உபகார வேதனம் பெற்று வருபவராகிய இணுவில் திரு. R. மயில்வாகனமவர்களின் புதல்வி திருவளர் செல்வி மகாலட்சுமி அம்மாளுக்கும், சென்ற சனிக்கிழமை (3-6-44) இரவு 10 மணிக்குமேல் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில், மணமகன் இல்லமாகிய 'பத்மினிவாச'த்தில் விவாகம் சிறப்பாக நிறைவேறியது. மணமக்கள் அட்ட ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும்வண்ணம் எல்லாம்வல்ல இறைவன் திருவருள் முன்னிற்பதாக

### நமசிவாயம்—விஜயலட்சுமி

திரு. R. நமசிவாயமவர்களுக்கும், கொழும்பில் உயர்தர உத்தியோகம் வகித்திருக்கும் திரு. K. கனகரத்தின மவர்களின் புதல்வி திருவளர் செல்வி விஜயலட்சுமி யம்மாளுக்கும், நேற்று 4-6-44 பகல் 11 மணிக்குமேல் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில், பம்பலப்பிட்டியாவிலுள்ள "மாமூஜிவில்ல" என்னும் சிறந்த வாசஸ்தானத்தில், விவாகம் வெகு சிறப்பான முறையில நிறைவெய்தியது. அச்சமையத்தில் சுற்றமித்திரர் அயலார் ஆயிரக்கணக்கானேர் சமூகஞ்செய்து பலவாறு உபசரிக்கப்பெற்றனர். தம்பதிகள் பதினறு பேறுகளையும் பெற்று இன்புற்று இனிது வாழும்வண்ணம் கருணாநிதியாகிய இறைவன் திருவருள் கைகூடுவதாக.


## காணி விற்பனவு விளம்பரம்

1. கட்டிடத்திற்காகிய நிலம் பத்துப் (10) பாப்புக் கொண்டது. யாழ்ப்பாணப் புகையிரதத் தானத்திற்குப் போகும் தெருவுக்குச் சமீபமாய் குறித்த புகையிரதத்தானத்திற்குச் சிலயார் தூரமாயுளளது.

2. கிளிநொச்சியில் பதின் மூன்று (13) ஏக்கர் நெற்பரப்புக் கொண்ட வயல்நிலம். கிளிநொச்சிப் புகையிரதத் தானத்திற்கு ஒரு மைலுக்குட்பட்ட தூரத்திலுளளது.

விபரங்களை அறிய விரும்புவோர் கீழ்வரும் விலாசத்திற்குத் தெரிவிக்கவும்.

V. N. Bartlett,
off Martyn's Road, Jaffna.
Mis 47 5 & 8-6-44


## மரணம்

நீர்ப்பாய்ச்சற் பகுதியிலிருந்துகடமைபார்த்த திரு. அ. பொன்னம்பலம் அவர்கள் தமது ஜனன ஊராகிய சிறுப்பிட்டியில் 30-5-44 காலை 6 மணியளவில் காலஞ் சென்றுவிட்டார்.

P. C. Ponniah Esqr
Siruppiddy, Puttur.
Mis 44 1 & 5-6-44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கீத வித்துவான்கள் 1 கோபால கிருஷ்ண பாரதி

3-ம் பக்கத் தொடர்ச்சி

தபஞ்சம் நீங்கியது. அடுத்தடுத்து இவர் இயற்றிய கீர்த்தனங்கள் ஒவ்வொன்றாக வெளிவரலாயின. இயற்றிய சில நாட்களுள் அக்கீர்த்தனங்கள் பாகவதர்களாலும் வித்துவான்களாலும் தமிழ்நாடு முழுவதும் பரவின. நாகபட்டினத்தில் கப்பல் வியாபாரியும் சிவபக்திச் செல்வருமாக இருந்த கந்தப்பச் செட்டியாரென்பவரின் விருப்பப்படியும், பல அன்பர்களின் வேண்டுகோளின்படியும், நந்தனார் சரித்திரத்தைக் கீர்த்தனையாக இயற்றத் தொடங்கினார். சில மாதங்களில் நந்தனார் சரித்திரத்தைக் கீர்த்தன ரூபமாக இயற்றி முடித்தார். பலமுறை நினைந்து நினைந்து இயற்றியதாகலின் அச்சரித்திரம் இவருடைய உலக அநுபவத்தையும் சிவபக்திப் பெருக்கையும் யோகாநுபவம் முதலியவற்றையும் புலப்படுத்தியது. பெருஞ்செல்வராகிய கந்தப்பச் செட்டியார் அந்த அரங்கேற்றம் ஓர் பெரிய திருவிழாவைப்போல நடைபெறுவதற்கு உரிய முயற்சிகளைச் செய்தார். வெளியூர்களிலுள்ள சங்கீத வித்துவான்களும் பாவலர்களும் பலரும் வந்து கூடினர். அரங்கேற்றம் பல நாட்கள் நடைபெற்றது. ஒவ்வொருநாளும் பெருங் கூட்டமான அன்பர்கள் வந்து கதையைக் கேட்டு இன்புற்றனர். நாகபட்டினத்தில் நாள்தோறும் இங்ஙனம் கதை நடைபெற்று வருகையில் காரைக்காலிலுள்ள உத்தியோகஸ்தர்கள் நாகை வந்து கதையைக் கேட்டு இன்புற்றுச் சென்றனர். காரைக்காலிலுள்ள கலெக்டராயிருந்த ஸீஸேதுரை யென்னும் ஒருவரான தமிழ்ப்புலமையுள்ள உத்தியோகஸ்தர்கள் பலரில் கச்சேரியில் தூக்க கலக்கத்தால் அவஸ்தைப் படுவதற்குக் காரணம் பாரதியாரவர்கள் செய்துவந்த கதாப்பிரசங்கமே யென்றறிந்து பாரதியாரை அவ்விடத்திற்கு அழைப்பித்து நந்தனார் சரித்திரப் பிரசங்கத்தை நடத்தச்செய்தனர். பின்பு ஸீஸேதுரையே நந்தனார் சரித்திரத்தை முதன் முதலில் அச்சிட்டு வெளிப்படுத்தினார். அந்நூல் தமிழ் நாடெங்கணும் பரவி, அதற்கு ஒரு பெரிய தனிமதிப்பு உண்டாயிற்று. இச்சரித்திரம் பலருக்குச் சிவபத்தியையும், தமிழ்க்கீர்த்தனங்களில் சுவையையும் உண்டாக்கியது. பாரதியாருக்கு நந்தனார் சரித்திரம் புகழுடைமையை நாட்டியது. நந்தனார் சரித்திரம் என்று சொல்லும்போதே யாருக்கும் கோபாலகிருஷ்ண பாரதியாருடைய ஞாபகம் உண்டாகாமல் இராது.

"சிவலோகநாதனைக் கண்டு சேவித்திடுவோம் வாரீர்"
"சற்றே விலகியிரும் பிள்ளாய் சந்நிதானம் மறைக்குதாம் நீ"
எப்போ வருவாரோ—எந்தன் கலி தீர—எப்போ வருவாரோ"
"மகனைக் கஷ்டமேது தில்லை நடராஜனிருக்கும்போது"
"ஆடிய பாதத்தைக் காணுரோ பிறந்தானந்தம் பூணுமோ"
'பித்தந்தெளிய மருந்தொன்றிருக்குது பேரின்பமன்றினிலே'
'கனகசபாபதி தரிசனம் ஒருநாள் கண்டால் கலிதீரும்'

என்னும் பல்லவியுடன் கீர்த்தனங்கள் தமிழ் நாட்டில் இன்றும் போற்றிப் படிக்கப்பட்டு வருகின்றன. காலஞ்சென்ற எனது அருமைத் தந்தையாரவர்கள் பலமுறைகளில் மேற்கூறிய கீர்த்தனங்களை மிக்க ஈடுபாட்டுடன் ஓதி மனமுருகுவார்கள். "கனகசபாபதி தரிசனம் ஒருநாள் கண்டால் கலிதீரும்" என்ற கீர்த்தனத்தை யான் ஏழு வயதுச் சிறுவனாக இருக்கும்போதே படிப்பித்தார்கள். அது இன்றும் என் நினைவில் இருக்கின்றது.

"திருவடி சரணமென்றுனை நான் நம்பி வந்தேன்
தேவாதி தேவா உன் (திருவடி)
"ஆடியபாத தெரிசனம் கண்டால்
ஆனந்தம் பெண்ணே (ஆடிய)

என்னும் பல்லவியுடன் தொடங்கும் தனிக் கீர்த்தனங்களை இன்றும் தமிழ்நாட்டிலுள்ள சங்கீத வித்துவான்கள் சிவபக்தியிலாழ்ந்து உருகிப் படிப்பதனைக் கேட்டிருக்கின்றேன்.

இவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, மாயூரம் வேதநாயகம்பிள்ளை முதலியவர்களால் பெரிதும் நன்கு மதிக்கப் பெற்றவர். காலஞ்சென்ற தமிழ்வள்ளலாகிய டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்களின் தந்தையாகிய வெங்கடசுப்பையரவர்கள், திருவாவடுதுறை யாதீனத்தில் 16-ம் பட்டத்தில் தலைவராக விற்றிருந்த மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள், சங்கீத வித்துவான் மகா வைத்தியநாதையர் முதலியவர்களுடன் கலந்து சல்லாபஞ் செய்தவர். அவர்களின் அன்பிற்கு இருப்பிடமாயிருந்தவர். யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள் ஒருமுறை சிதம்பரஞ் சென்றிருந்தபோது பாரதியார் சிதம்பர ஆலயத்தில் பாடிக்கொண்டிருந்ததைக் கவனித்தார். அவருடைய சிவபக்தித் திறமையைக் கண்டு வியந்தார். அவர் கீர்த்தனங்களைக் கேட்டு இன்புற்றார். மறுநாள் ஆலயத்திற்கு வந்து தம்முடைய ஞாபகத்தின் அறிகுறியாக இருக்கவேண்டுமென்று பத்துரூபா அளித்தனர். பாரதியார் இயற்பகை நாயனார் சரித்திரம், திருநீலகண்டநாயனார் சரித்திரம், காரைக்காலம்மையார் சரித்திரம் முதலியவற்றைக் கீர்த்தன ரூபத்தில் அமைத்துப் பாடியிருக்கின்றார்கள். அவைகள் அச்சிடப்படவில்லை. இப்பொழுது அவைகள் முழு உருவத்தோடு இருக்கின்றனவா என்பது சந்தேகமுடையதாக இருக்கின்றது.

இவர் தொண்ணூற்றெட்டு பிராயம் வரையில் வாழ்ந்து வந்தனரென்ப. இவருடைய பிரமசரிய விரதமே இவருடைய தீர்க்காயுளுக்குக் காரணமாகும். இவர் சிவபெருமான திருவடி நீழலிற் கலந்த காலம் ஒரு சிவராத்திரி யென்ப. சிவயோகச் செல்வராகிய இவருக்கு அத்தகைய விதேயாகம் நேர்ந்தது பொருத்தமுடையதேயாம்.

"இறைவனுடைய புகழை இசையிற் கரைத்து தமிழ்நாட்டிற் புகட்டிய இம்மகானுடைய பிறப்பும் வாழ்க்கையும் தேகவியோகமும் சிவபிரானுடைய தொடர்புடையனவாகவே இருப்பதில் வியப்பு ஒன்றும் இல்லை" இன்னிசையில் விருப்பும் சிவபக்தியும் ஒருங்கு வாய்க்கப்பெற்ற பெரியர்கள் இவருடைய சிவப்பூரணமடைந்த திருநாளைக் கொண்டாடுதல் இன்றியமையாததொன்றாம். இவரைப்போலவே சங்கீதம் நன்கு வாய்க்கப்பெற்றவர்கள் இசையை ஈசுவரார்ப்பணம் செய்தல் வேண்டும். ஸ்ரீதியாகராஜ சுவாமிகள் தமது இசையை ஸ்ரீ ராமமூர்த்திக்கு அர்ப்பணம் செய்தபடியாலல்லவா அவருடைய புகழ் இன்றும் நன்கு நிலவி ஒளிவீசுகின்றது. என்றும் நிலவுதற்குரியது.

## வியாபாரத்திற்கழகு விளம்பரஞ் செய்தல்

# சுவேதாசுவதரோபநிடதம்

(திரு. ஐ. பொன்னையா, ஏழாலை)

இரண்டாமத்தியாயம்
(முற்றொடர்-)

(எ) ஸவித்ரா ப்ரஸவேந யுஷேத ப்ரஹ்மபூர்வ்யம்,
தத்ர யோநிம் க்ருணவஸே ந ஹி தே பூர்வ மக்ஷிபத்,

(இம்மந்திரம் அற்ப மாறுபாட்டோடு இருக்குவேதம், ௬-௧௩-௧ அற்காணப்படுவது.

இ—ள்: ஸவித்ரா ப்ரஸவேந-பரமேசுவரனது திருவருளினால் பூர்வ்யம் ப்ரஹ்ம- (எல்லாம் தோன்றுதற்கு) முன்னுள்ள (எவற்றினுக்கும் காரணமான) பிரமத்தை, யுஷேத-சேவிப்பானாக. தத்ர-அங்கு (அப்பிரமத்தினிடத்தில்), யோநிம் க்ருணவஸே - புகலிடத்தைத் தேடுவாயாக (தேடுவாயாயின்) பூர்வம்-முன்செய்த வினை, ந ஹி அக்ஷிபத்-பந்த காரணமாகாதன்றே!

கு-பு (க) 'பரமேசுவரனது திருவருளினால் பிரமத்தைச் சேவிப்பானாக" பரமேசுவரன் என்றது இறைவனது தடத்த நிலையாகிய பதியினைக் குறிக்கும். சிவம் (பிரமம்) பதி எனவிரண்டாகக் கூறப்படினும், உண்மையில் இரண்டற்கும் பேதமில்லை என்பது சர்வஞானோத்தரம் பவுட்கரம் முதலிய ஆகமங்கள் வாயிலாக உணரப்படும். ஈண்டு விரிக்கிற் பெருகும்.

அவ்விறைவனை நாம் வழிபடுதற்குரிய அறிவாற்றலை அவனே நமக்குத் தந்தருளுதல் வேண்டும். அவ்வருள் முன்னை நல்வினைப்பயனால் விளைவது. ஆகலான் இயன்றவாறு நல்வினை செய்தல் நம் கடன்.

"ஆசைவன் பாசமெய்தி யங்குற்றேனிங் குற்றனு
ஊசலாட்டுண்டு வாழா வுழந்து நானுழிதராமே
தேசனே தேசமூர்த்தி திருமறைக்காடு மேய
ஈசனே யுன்றன் பாதமேத்த மாற்றருள்ளம்மானே"
நா-தேவாரம்.

"அவனருளாலே யவன்றாள் வணங்கி" திருவாசகம்.

(உ) "பிரமத்தினிடத்தில் புகலிடத்தைத் தேடுவாயாயின் முன்செய்தவினை பந்தகாரணமாகாதன்றோ!" பந்தகாரணமாகா தென்று நூல்கள் கூறிய உண்மையை எடுத்துக்காட்டி இறைவனைச் சரணடையுமாறு சுருதிவற்புறுத்தியது. சரணடைதலாவது, "நாமல்ல இந்திரியம் நம்வழியினல்லவழி நாமல்ல நாமுமானுடைமை' (சிவஞானபோதம்-௧0-உ-௧) என்றவாறு பதி பசு பாச இயல்புகளை நல்லாசிரியன் வாயிலாக ஆராய்ந்தறிந்து தன்செயலொழிந்து இறைவனடிக்கீழடங்கியிருத்தல் அங்ஙனமிருக்கவே ஆகாமியவினை யேறாது, பிராரத்தம் தாக்குதலின்றி உடலனுபவமாத்திரையாய்க் கழியும், சஞ்சிதம் முன்னமே ஆசாரியன் முன்னிலையிலொழிந்துவிடும். மற்றைத்தில் முன்வினை யென்றது ஆகாமியத்தையுடன் கொண்டு வருவதாகிய பிராரத்தத்தையென்க. இதனும் நுவன்றவல் விரிக்கு கடக்கு முன்னைக் கலைச் சிவஞானபோதம் சித்தியார் என்பவற்றின் பத்தாஞ் சூத்திரப் பொருளைத் தக்கார்வாய்க் கேட்டறிக.

"சந்திரற் சடையில் வைத்த சங்கரன் சாமவேதி, அந்தரத்தமரர் பெம்மானுனல் வெள்ளூர்தியான்றன், மந்திர நமச்சிவாயவாக நீறணியப்பெற்றால், வெந்தறும் வினையு நோயும் வெவ்வழல் விறகிட்டன்றே" நா-தேவாரம்.

(திருவைந்தெழுத்தும் திருவெண்ணீறும் உருத்திராக்கமுமாகிய சிவசின்னங்கள் மலமாயை கன்மங்களையொழித்து வீட்டு நெறியில் உயிரைச் செலுத்துவனவாம் என்னுமுண்மை இனி வெளிவரும் பஞ்சஜாபாலம் பஞ்சருத்திரம் என்னுமுபநிடதங்களில் நன்கு விளங்கும்)

பொ-ரை-எல்லாந் தோன்றுதற்குக் காரணமாயுள்ள பிரமத்தைத் தியானயோகஞ் செய்தலில் விருப்புடையோன் சேவிப்பானாக. நீ அப்பிரமத்தினிடத்தில் சரணடைவாயாயின் முன் வினைகள் இனியுன்னைப் பாதிக்கமாட்டா.

வினையின் முனைப்பொழியவே தியானயோகத்திற்குள்வந்த இடையூறுகளும் நிகழமாட்டா என்பது கருத்து.

(அ) த்ரிருந்நதம் ஸ்தாப்ய ஸமம் ஶரீரம் ஹ்ருதீந்த்ரியாணி மநஸா ஸம் நிவேஶ்ய, ப்ரஹ்மோடுபேந ப்ரதரேத வித்வாந் ஸ்ரோதாம்ஸி ஸர்வாணி பயாவஹாநி.

(இனி யோகஞ்செய்யும் முறை கூறப்படுகின்றது)

இ—ள்: வித்வாந்-அறிஞனவன், த்ரி: உந்நதம் ஸ்தாப்ய-மேற்பாகத்திலுள்ள மார்பு, கழுத்து, தலை ஆகிய மூன்று பகுதிகளையும் நேராக நிறுத்தி, ஶரீரம் ஸமம் (ஸ்தாப்ய) சரீரத்தைச் சமஞ்செய்து, மநஸா இந்த்ரியாணி-மனதையும் இந்திரியங்களையும், ஹ்ருதீ ஸம் நிவேஶ்ய-இருதயத்திலே பிரவேசிக்கும்படி செய்து (ஒடுக்கி) ப்ரஹ்ம உடுபேந-பிரணவமாகிய தெப்பத்தைக் கொண்டு, ஸர்வாணி பயாவஹாநி ஸ்ரோதாம்ஸி-எல்லாப் பயங்கரமான ஆறுகளையும், ப்ரதரேத-கடத்தல் வேண்டும்.

"தனியிடத்தில் சுகாசனத்திருந்து சுத்தனாய்க் கழுத்து, தலை, சரீரம் இவற்றைச் சமமாக நிறுத்தி...... எல்லா இந்திரியங்களையு மடக்கி" சைவசித்தாந்த பாத நிடதம்-௫-௫.

கு-பு "பிரணவமாகிய தெப்பத்தைக் கொண்டு பயங்கரமான எல்லா ஆறுகளையும் கடத்தல் வேண்டும்" உலகப் பொருட்களின் மேற்கொண்ட பற்றுக்களை-அவற்றால் விளையுந் துன்பங்களை "ஆறுகள்" என உருவகித்தது. பிரணவத்தியானத்தினால் இவற்றை எளிதிற் கடந்துவிடுதல் கூடும் என்பது கருத்து. ஓங்காரம் பிரணவம் என்பன சிவநாமங்களாவன என்று அதர்வசிரம் முதலிய உபநிடதங்கள் கூறும். பிரணவ சப்தம் எழுத்து நிலைமாறுதலின்றி உமையம்மையாரின் திருநாமமுமாயிற்று என்றும், அதன் வரிவடிவம் சிவலிங்க ரூபமாமென்றும் சிவமகாபுராணம் முதலியன கூறும். அவற்றை அடுத்தமுறை காட்டுவோம்.

—தொடரும்.

வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors-the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Monday, 5 June, 1944

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org